www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 7

7 2 1 4 X X

# மூன்றாம் இடைப் பருவத் தேர்வு - 2025

## தமிழ்

நேரம் : 1.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 30

### பகுதி – I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6x1=6

1. ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காகவும் என்பது.

(அ) தனியுடைமை (ஆ) பொதுவுடைமை (இ) பொருளுடைமை (ஈ) ஒழுக்கமுடைமை

2. திருநெல்வேலி -------- ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

(அ) காவிரி (ஆ) வைகை (இ) தென்பெண்ணை (ஈ) தாமிரபரணி

3. ஞானச்சுடர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(அ) ஞானம் + சுடர் (ஆ) ஞானச் + சுடர்

(இ) ஞான + சுடர் (ஈ) ஞானி + சுடர்

4. மக்கள் அனைவரும் --------ஒத்த இயல்புடையவர்கள்.

அ) பிறப்பால் (ஆ) நிறத்தால் (இ) குணத்தால் (ஈ) பணத்தால்.

நிரப்புக.

5. உழவர் சேற்று வயலில் -------- நடுவர்.

6. நாட்டுப்புறப் பாடலை -------- இலக்கியம் என்றும் வழங்குவர்.

### பகுதி – II

II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 4x2=8

7. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?

8. நெற்கதிரில் இருந்து நெல் மணியை எவ்வாறு பிரிப்பர்?

9. எழுத்து வழக்காக மாற்றுக. அ) போயி ஆ) வாரான்

10. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

11. கலைச் சொல் தருக. அ) Neighbour ஆ) Agronomy

12. தலைப்புச் செய்திகளை முழு சொற்றொடர்களாக எழுதுக.

மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி – ஏழாம் வகுப்பு மாணவி முதலிடம்.

## பகுதி – III

III. ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2x3=6

13. உவமை அணிக்கும், எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

14. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

15. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?

IV. அடிபிறழாமல் எழுதுக. 3+2=5

16. அ) 'மாரியொன்று' எனத் தொடங்கும் பழமொழி நானூறு பாடல்.

(அல்லது)

'வையம்' எனத் தொடங்கும் முதல் திருவந்தாதிப் பாடல்.

ஆ) 'பிறப்பொக்கும்' எனத் தொடங்கும் திருக்குறள்.

## பகுதி – IV

V. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விரிவான விடையளி. 1x5=5

17. உண்மை ஒளி படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.

18. "என்னைக் கவர்ந்த நூல்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner